

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, மூலனூர் கிழக்கு ஒன்றியம் மற்றும் கன்னிவாடி பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் ப.பழனிச்சாமி, கன்னிவாடி பேரூர் கழக கோ.சுரேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், ஒன்றிய கழக செயலாளர் துரை. தமிழரசு உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்பட்டு வந்த

# 72.3 சதவீத தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து!

## தமிழ்நாட்டில் அதிகம்; ஒன்றிய அரசு தரவுகளில் பகீர்!

புதுடெல்லி, ஜூலை 8-

ஒன்றிய அரசின் கடுமையான விதிமுறைகளால் இந்தியாவில் செயல்பட்டு வந்த பெரும்பாலான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் வெளிநாட்டு நிதி பெறும் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய உள்துறை அமைச்சகம் வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு முறைப்படுத்துதல் சட்டத்தின் (எஃப்சிஆர்ஏ) கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் அமைப்புகளின் தரவுகளை கடந்த 2012ம் ஆண்டு முதல் பராமரிக்கத் தொடங்கியது.

அன்று முதல் இதுவரை மொத்தம் 52,159 தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கு வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டன. ஆனால், நிதிப் பரிமாற்றங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் நிதி பயன்பாட்டை முறைப்படுத்தும் நோக்கில், கடந்த 2010ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் ஒன்றிய அரசு கடுமையான விதிமுறைகளைப் புகுத்தியது. இந்த புதிய விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய மற்றும் தங்களது 5 ஆண்டுகள் காலாவதிக்குப் பிறகு உரிமத்தைப் புதுப்பிக்காத 15,206 நிறுவனங்களின் உரிமங்கள் காலாவதியானதாக அறிவிக்கப்பட்டன.

மேலும், கடந்த 2015ம் ஆண்டில் மட்டும் 10,000க்கும் மேற்பட்ட அமைப்புகள் தங்களது உரிமங்களை இழந்த நிலையில், இதுவரை மொத்தம் 22,498 தன்னார்வ நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்திற்கு எதிராகப் போராடிய சில தமிழகதன்னார்வ நிறுவனங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிராகச் செயல்பட்டதாகக் கூறி அவற்றின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டது.

தற்போதைய நிலவரப்படி, பதிவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த நிறுவனங்களில் வெறும் 27.7 சதவீதம் அதாவது 14,455 தன்னார்வ நிறுவனங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. எஞ்சிய 72.3 சதவீதம் (52,184) நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன அல்லது காலாவதியாகிவிட்டன. மாநில வாரியான பட்டியலில் 2,104 செயல்முறையிலுள்ள நிறுவனங்களுடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது; இங்கு 2,865 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் 1,774 உரிமங்கள் காலாவதியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 5,440 நிறுவனங்களில் 1,583 நிறுவனங்கள் மட்டுமே தற்போது செயல்பாட்டில் உள்ளன; அங்கு 2,211 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு, 1,646 உரிமங்கள் காலாவதியாகியுள்ளன. உரிமங்கள் ரத்து மற்றும் காலாவதியான பட்டியலில் பீகார் மாநிலம் 85.2 சதவீதத்துடன் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து உத்திரப் பிரதேசம் 83.7 சதவீதம், நாகாலாந்து 83.3 சதவீதம், திரிபுரா 80 சதவீதம், மகாராஷ்டிரா 78.9 சதவீதம், மணிப்பூர் 78.6 சதவீதம் மற்றும் மேற்கு வங்கம் 78.2 சதவீதத்துடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. வடகிழக்கு மாநிலங்களில் பெரும்பாலான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் பெருமளவில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# 41 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆம்பூர் ஆர். சம்பங்கி**

(முன்னாள் எம்.எல்.ஏ.,
முன்னாள் நகர சபைத் தலைவர்)

## வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!

**தர்மமே, எங்கள் தந்தையே,**
**அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்**
**உன் வழியாய்க் கொண்டவரே,**
**பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்**
**புனிதரோடிணைந்தவரே**
**விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை**
**உயிர் முழக்கம் செய்தவரே**
**கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்**
**கண்மணியாய் இருந்தவரே**
**துன்பங்கள் சூழுகையில் – அதனை**
**துச்சமென உமிழ்ந்தவரே**
**இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்**
**இதயத்தில் பொழிபவரே**
**என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்**
**காத்திட வாழ்த்திடுங்கள்**

மகன்கள் : (லேட்) **ஆர்.எஸ்.மனோகர்** குடும்பத்தினர்
**ஆர்.எஸ். ஆனந்தன்** எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
**ஆர்.எஸ்.ராஜு** பி.காம்.,
மகள் : **ஆர்.எஸ்.சாந்தி** மற்றும் மருமகள்கள், மருமகன்
பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.

### புதுச்சேரி மாநிலத்தில் சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு

# வங்கிகள் அளித்துள்ள கடன்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுக!

## புதுச்சேரி அரசை - தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, ஜூலை 8-

இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவை மதிக்காமல் செயல்படும் இந்தியன் வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், சர்ஃபாசி சட்டத்தை வங்கி அதிகாரிகள் சட்டவிரோதமாக பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் சொத்துக்களை ஏலம் விட்டு கொள்ளை அடிப்பதைக் கண்டித்தும், சிறு, குறு தொழில்களை நசுக்கும் வங்கி நிர்வாகத்தை கண்டித்தும் அகில இந்திய வங்கி மற்றும் வங்கி சாரா வாடிக்கையாளர் நலன் மற்றும் பாதுகாப்பு நலச்சங்கம் சார்பில் புதுச்சேரி கொக்குப்பார்க் சந்திப்பில் இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் அருகில் நேற்று முன்தினம் காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





ஆர்ப்பாட்டத்திற்கு சங்க ஒருங்கிணைப்பாளர் நடராஜன் தலைமை வகித்தார். தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசுகையில், வங்கிகள் மக்களின் பணத்தைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட அமைப்புகளா, அல்லது மக்களிடம் பல்வேறு கட்டணங்களை வசூலித்து லாபம் ஈட்டும் நிறுவனங்களா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

ஒரு சாதாரண மனிதர் வங்கியில் பணம் செலுத்தினாலும் கட்டணம், பணம் எடுத்தாலும் கட்டணம், குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாவிட்டாலும் கட்டணம், குறுஞ்செய்திக்கும் கட்டணம் என வாடிக்கையாளர்களின் மீது பல்வேறு பெயர்களில் சுமைகள் ஏற்றப்படுகின்றன. வங்கிகள் தங்களது கட்டண விவரங்களை வெளிப்படையாகவும் எளிதில் புரியும் வகையிலும் தெரிவிக்க வேண்டும்.

**அவமானப்படுத்தும் அணுகுமுறை!**

பெரிய நிறுவனங்களின் கடன்களை வசூலிப்பதில் காட்டப்படாத வேகம், சிறு வியாபாரி, நடுத்தர குடும்பம், வீடு கட்ட கடன் வாங்கியவர், வாகனக் கடன் பெற்றவர் ஆகியோரிடம் மட்டும் காட்டப்படுவது ஏன்? ஒரு தவணை தாமதமானாலே சாதாரண மக்களுக்கு தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள், அழுத்தம், அவமானப் படுத்தும் அணுகுமுறை போன்ற புகார்கள் எழுகின்றன. கடன் வசூல் நடவடிக்கைகள் சட்டத்திற்கும் மனித கண்ணியத்திற்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.

சர்ஃபாசி சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் போது, சிறு மற்றும் நடுத்தர கடனாளிகளின் வாழ்வாதாரம், தொழில் தொடர்ச்சி, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிய மறுசீரமைப்பு மற்றும் நியாயமான தீர்வு வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். சிறு தொழில்களைத் தொடங்குங்கள், இளைஞர்கள் தொழில்முனைவோராக மாறுங்கள் என்று அரசு கூறுகிறது. ஆனால் தொழிலில் ஒரு பின்னடைவு ஏற்பட்டவுடன் வங்கிகள் அவர்களை மீண்டும் எழ முடியாத நிலைக்குத் தள்ளினால், புதிய தொழில் முனைவோர் எப்படி உருவாக முடியும்? முத்ரா, ஸ்டார்ட்-அப் போன்ற திட்டங்கள் விளம்பரத்திற்கான வார்த்தைகளாக மட்டும் இருக்கக் கூடாது. சிறு தொழில்களுக்கு எளிய கடன், நியாயமான வட்டி, மறுசீரமைப்பு வாய்ப்பு மற்றும் தொழில் தோல்வியடைந்தால் மீண்டு வருவதற்கான பாதுகாப்பு ஆகியவை தேவை.

**வங்கி தொடர்பான அறிவிப்புகள் தமிழ்மொழியில் காட்சிப்படுத்த வேண்டும்!**

வங்கி வாடிக்கையாளர்களின் புகார்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தீர்க்கப்பட வேண்டும். வங்கிகள் மீது புகார் அளிக்கும் பொதுமக்கள் அலைக்கழிக்கப்படக் கூடாது. புகார் பதிவு செய்தவுடன் கண்காணிப்பு எண், தீர்வுக்கான காலக்கெடு, மேல்முறையீட்டு வழிமுறை ஆகியவை தெளிவாக வழங்கப்பட வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகள் தொடர்பான அறிவிப்புகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் அனைத்து வங்கிக் கிளைகளிலும் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

புதுச்சேரியில் கடந்த ஆண்டு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் புதுச்சேரியில் சிறு, குறு, நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக பல ஆயிரம் கோடி கடன் அளித்திருப்பதாகவும், அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகி இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதன்படி, புதுச்சேரியில் உள்ள வங்கிகள் மூலம் எவ்வளவு சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், முத்ரா, ஸ்டார்ட்-அப் திட்டங்களில் எவ்வளவு பேருக்கு வங்கி கடனளித்திருக்கிது என்பது குறித்தும், ஏழை, எளிய மக்கள் சிறு கடன் பெற்றவர் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒன்றை புதுச்சேரி அரசு வெளியிட வேண்டும்.

**வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு முக்கியம்!**

வங்கிகள் மக்களுக்காக இருக்க வேண்டும். மக்கள் வங்கிகளுக்காக வாழ வேண்டிய நிலை ஏற்படக் கூடாது. சேமிப்பாளரின் பணமும் பாதுகாக்கப்பட வேண்டும்; கடன் வாங்கியவரின் கண்ணியமும் பாதுகாக்கப்பட வேண்டும். சட்டம் வங்கிகளுக்கு மட்டும் கவசமாக இருக்கக் கூடாது. சாதாரண மக்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் தி.மு.க. மக்கள் பக்கம் உறுதியாக நிற்கும்.

இவ்வாறு பேசினார்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இளம்பரிதி, தொகுதி செயலாளர்கள் நடராஜன், வடிவேல், தியாகராஜன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மதிமாறன், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன், மாநில துணை அமைப்பாளர்கள் சிவதாஸ், சிவா, உருளையன்பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் - குண்டடம் பகுதியில்

# 50 ஆண்டுகள் பழமையான நெடுஞ்சாலையோர மரங்கள் வெட்டி கடத்தல்?

## நடவடிக்கை எடுக்காத வனத்துறை!

திருப்பூர், ஜூலை 8-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மற்றும் குண்டடம் பகுதியில் 50 ஆண்டுகள் பழமையான நெடுஞ்சாலையோர மரங்கள் திட்டமிட்டு அழிக்கப் பட்டு வருவதால் இயற்கை ஆர்வலர்கள் வேதனையில் உள்ளனர்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக கோவை தாராபுரம் சாலையில் பல்லடம் முதல் குண்டடம் அடுத்துள்ள திருப்பூர் பிரிவு வரை உள்ள சாலை 4 வழிப்பாதையாக மாற்றப்பட்டது. சாலை விரிவாக்க பணிகளின் போது சாலையோரங்களில் இருந்த ஏராளமான மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. சாலை போடும் பணிகள் நிறைவடைந்த பிறகு சாலைகளின் இருபுறங்களிலும் வேம்பு, நாவல், அத்தி, புங்கன், கொன்றை உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த நிலையில், குண்டடம் பகுதியில் மட்டும் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. தாராபுரம் பொள்ளாச்சி சாலையில் 50 ஆண்டுகள் பழமை யான மரங்கள் வெட்டி அழிக்கப் பட்டுள்ளன. காற்றாலை மற்றும் சூரியஒளி தகடுகள் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை வேறு பகுதிக்கு கொண்டு செல்கிறோம் எனக் கூறி உயர்மின் கம்பங்களை அமைத்து மின் கம்பிகள் செல்லும் பகுதியில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டி வீசப்படு கின்றன.

மரங்களை வெட்டி அதனை திருப்பூர், கோவையில் உள்ள சாயப்பட்டறை, ஸ்டீம் பாய்லர் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கும் அரசு தடை விதித்துள்ள நிலையில் தாராபுரம் பகுதியில் இருந்து மட்டும் தினமும் மரங்கள் வெட்டி எடுத்துச்சென்று விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மரங்கள் அழிக்கப்படுவது தொடர்பாக எந்த விதமான விசாரணையும் இதுவரை நடந்ததாக தெரியவில்லை.

# இல்லாத மருத்துவமனைக்கு 87 பேர் பணி நியமனம்!

இந்தூர், ஜூலை 8–

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்த நிலையில், அதன் கட்டுமானப்பணிகள் இதுவரை முடியவில்லை. இதேபோல், மத்திய பிரதேசம் இந்தூரில் 100 படுக்கை கொண்ட நவீன அரசு மருத்துவமனை கட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை ஒரு எந்த கட்டுமானமும் நடைபெறவில்லை. இருப்பினும், அரசு ஆவணங்களில் அந்த மருத்துவமனை செயல்படுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. மேலும், இல்லாத மருத்துவமனைக்கு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என மொத்தம் 87 பேருக்கு பணிநியமனங்கள் வழங்கப்பட்டது அம்பலமாகியுள்ளது.

மருத்துவமனை செயல்பாட்டில் இல்லாத நிலையில், அந்த 87 பேரும் படிப்படியாக வேறு அரசு மருத்துவமனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த மோசடி விவகாரம் மத்திய பிரதேசத்தில் தற்போது பூதாகரமாக வெடித்துள்ளது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மறைந்த ஜி.சுகுமார் என்கிற சுப்பிரமணியன் அவர்களின் 6–ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவருடைய இல்லத்தில் திருவுருவப்படத்திற்கு காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் பி.சேகர், பி.எம்.குமார், க.குமணன், பகுதி செயலாளர்ள் எஸ்.சந்துரு, சு.வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் அ.யுவராஜ், டி.சஞ்சய் காந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி இ.எல்.கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி எஸ்.அரவிந்தகுமார், எஸ்.அண்ணாதுரை, ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.சுந்தரமூர்த்தி, எம்.சண்முகம், வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய இளைஞரணி வி.குமரன், எஸ்.எஸ்.கே.சத்யா, தியாகராஜன், கார்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.


# இது உண்மையா குமாரு?

